பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி

சென்னை – 4

30-07-2025 7:15

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. **கல்வித் துறையின் வளர்ச்சியில் தேசிய கல்விக் கொள்கை பெரும் மாற்றத்தை கொண்டு வந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.**

2. **விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் 20 ஆவது தவணைத் தொகையை பிரதமர் வரும் சனிக்கிழமை விடுவிக்கவுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.**

3. **மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சியை மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்க வகை செய்யும் தீர்மானம் மக்களவையில் நிறைவேறியது.**

4. **இந்தியாவுக்கு 25 சதவீத வரி விதிக்கப்படுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.**

5. **17 வயதிற்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Hardeep தங்கப்பதக்கம் வென்றார்.**

**-- இனி விரிவான செய்திகள் --**

கல்வித்துறையின் வளர்ச்சியில் தேசிய கல்விக் கொள்கை பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக மத்திய கல்வித்துறை அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் எழுதியுள்ள கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

தேசிய கல்விக்கொள்கையின் தாக்கம் வகுப்பறைகளை எட்டியுள்ளதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>><><><><<

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் 20 ஆவது தவணைத் தொகையை பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் சனிக்கிழமை விடுவிக்கவுள்ளதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள காணொலிச் செய்தியில், இதற்கான விழா வாரணாசியில் நடைபெறவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் பிரதமர் ஆற்றும் உரை வேளாண் அறிவியல் மையங்களிலும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தின் மையங்களிலும் ஒளிபரப்பப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

வேளாண் பல்கலைக் கழகங்களிலும், தொடக்க வேளாண் கூட்டுறவு சங்க தலைமையகங்களிலும் பிரதமர் உரை ஒளிபரப்பப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் தவறாமல் இதில் பங்கேற்க வேண்டும் என்றும் திரு சிவராஜ் சிங் சவுகான் கேட்டுக் கொண்டுள்ளார்.

>><><><><<

**மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சியை மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்க வகை செய்யும் தீர்மானம் மக்களவையில் நிறைவேறியது.**

**முன்னதாக உள்துறை இணையமைச்சர் திரு நித்தியானந்த ராய் இதற்கான தீர்மானத்தை தாக்கல் செய்து பேசினார்.**

**மணிப்பூரில் கடந்த பிப்ரவரி 13 ஆம் தேதி குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டதாக கூறினார்.**

***அடுத்த மாதம் 13 ஆம் தேதிக்கு பின்னர் மேலும் 6 மாதங்களுக்கு இதனை நீட்டிக்க இந்த தீர்மானம் வகை செய்வதாக திரு நித்தியானந்த ராய் தெரிவித்தார்.***

>><><><<

*நாடுமுழுவதும் 585 ஆகாஷவாணி பண்பலை நிலையங்களும் 388 தனியார் பண்பலை நிலையங்களும் செயல்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.*

*மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனைத் தெரிவித்த அவர், 730 தனியார் பண்பலை நிலையங்களை தொடங்குவதற்கான மின்னணு ஏல நடைமுறைகளுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதை சுட்டிக்காட்டினார்.*

*பண்பலை ஒலிபரப்பு இல்லாத பகுதிகளுக்கு இதில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*இந்த பகுதிகளில் தொடங்கும் பண்பலை நிலையங்களுக்கான வருடாந்திர உரிமைக்கட்டணம் அதன் மொத்த வருவாயில் 4 சதவீதமாக இருக்கும் என்றும் டாக்டர் எல் முருகன் கூறினார்.*

>><><><<

*காற்றாலை மின்உற்பத்தி தொடர்ந்து அதிகரித்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.*

*இன்று மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனைத் தெரிவித்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு பிரல்காத் ஜோஷி இதுதொடர்பான புள்ளி விவரங்களையும் எடுத்துரைத்தார்.*

*காற்றாலை மின்உற்பத்தியை பொறுத்தவரை குஜராத் முதல் இடத்திலும், தமிழகம் 2 ஆவது இடத்திலும், கர்நாடகா 3 ஆவது இடத்திலும் உள்ளதாக அமைச்சர் கூறினார்.*

>><><><<

*நாடுமுழுவதும் உள்ள அஞ்சலகங்கள் அனைத்தும் அடுத்த மாதம் 4 ஆம் தேதிக்குள் டிஜிட்டல் மயமாக்கப்படவுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.*

*இதன்மூலம் 1 லட்சத்து 65 ஆயிரம் அஞ்சலகங்கள் டிஜிட்டல் மயமாக்கப்படவுள்ளதாக தொலைத் தொடர்புத் துறையின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.*

*இதுவரை 86 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அஞ்சலகங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*அஞ்சல் விநியோக சேவையை மேம்படுத்தும் நோக்கில் 344 மையங்கள் தொடங்கப்படவுள்ளதாகவும் அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

>><><><<

*பத்ம விருதுகளுக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசத்தை மத்திய அரசு அடுத்த மாதம் 15 ஆம் தேதி வரை நீட்டித்துள்ளது.*

*தேசிய விருதுகளுக்கான இணைய தளத்தில் இதற்கான பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.*

>><><><<

*நடப்பாண்டில் விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டுவரும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று சர்வதேச செலாவணி நிதியம் கூறியுள்ளது.*

*இதுதொடர்பாக அந்த நிதியம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் நடப்பாண்டிலும் அடுத்த ஆண்டிலும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6 புள்ளி நான்கு சதவீதமாக இருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

>><><><<

*தடுப்பூசி திட்டங்களை செயல்படுத்துவதில் இந்தியா குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டியுள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறியுள்ளார்.*

*மேற்கு வங்கத்தின் Nadia மாவட்டத்தில் உள்ள கல்யாணி எய்ம்ஸ் மருத்துவமனையின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு அவர் பேசினார்.*

*இளம் மருத்துவர்கள் ஏழை மக்களின் நலனுக்காக பாடுபட வேண்டும் என்றும் திருமதி திரவுபதி முர்மு கேட்டுக் கொண்டுள்ளார்.*

*>><><><<*

*இந்தியாவுக்கு 25 சதவீத வரி விதிக்கப்படுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.*

*இந்த அறிவிப்பு நாளை மறுநாள் முதல் செயல்பாட்டிற்கு வருவதாக அந்நாட்டு அதிபர் திரு டொனால்ட் டிரம்ப் கூறியுள்ளார்.*

*ரஷ்ய பொருட்களை இறக்குமதி செய்வதற்காக இந்த வரி விதிப்போடு கூடுதலாக அபராதமும் இந்தியாவுக்கு விதிக்கப்படும் என்றும் அமெரிக்க அதிபர் தெரிவித்துள்ளார்.*

*>><><><<*

*கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பாக இந்திய கடலோர காவல் படை ஐக்கிய அரபு எமிரேட்டுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.*

*புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானதாக மத்திய அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.*

*இந்திய கடலோர காவல்படை இதுபோன்ற 10 ஒப்பந்தங்களில் நட்பு நாடுகளுடன் கையெழுத்திட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் இந்த ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>><><><<*

*நைஜீரியாவில் காட்டாற்று வெள்ளத்தில் சிக்கி 23 பேர் உயிரிழந்தனர். 11 பேரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.*

*Adamawa மாகாணத்திற்கு உட்பட்ட Yolo பகுதியில் காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டதாகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.*

*கடந்த மே மாதம் தொடங்கி இதுவரை மழை வெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 200 ஆக அதிகரித்துள்ளது என்று அந்நாட்டு அரசு கூறியுள்ளது.*

*>><><><<*

*மேற்கு வங்கத்தையொட்டிய எல்லைப் பகுதியில் 44 லட்சம் ரூபாய் மதிப்பிலான தங்கக்கட்டிகளை எல்லைப் பாதுகாப்புப் படையினர் பறிமுதல் செய்தனர்.*

*Nadia மாவட்டத்திற்கு உட்பட்ட Baijnathpur -ல் எல்லைப் பாதுகாப்புப் படையினர் இவற்றை பறிமுதல் செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*இதுதொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.*

*>><><><<*

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

*17 வயதிற்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Hardeep தங்கப்பதக்கம் வென்றார்.*

*Greece ன் Athens -ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 110 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

-------------

*சவூதி அரேபியாவின் ரியாத்தில் நடைபெற்று வரும் சர்வதேச செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Arjun Erigaisi காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலின் ஆல்ரவுண்டர் பிரிவில் இந்தியாவின் ரவீந்திர ஜடேஜா தொடர்ந்து முதலிடத்தில் இருக்கிறார்.*

*117 புள்ளிகளைப் பெற்று அவர் முதலிடத்தில் உள்ளார்.*

*டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான தரவரிசைப்பட்டியலின் பேட்டிங் பிரிவில் அபிஷேக் ஷர்மா முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.*

----------------

*இங்கிலாந்தில் நடைபெற்று வரும் லெஜன்ட்ஸ் உலக கிரிக்கெட் சாம்பியன் போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

--------------

*ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டி பேங்காக்கில் இன்று தொடங்கியது.*

*அடுத்த மாதம் 12 ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில் 26 நாடுகளை சேர்ந்த 396-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர்.*

*இந்தியாவின் சார்பில் 19 வயது மற்றும் 22 வயதிற்குட்பட்டோருக்கான பிரிவுகளில் தலா 20 பேர் இதில் பங்கேற்றுள்ளனர்.*

--------------

*உலக ஜுனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியா 2-1 என்ற ஆட்டக்கணக்கில் தென்கொரியாவை வென்றது.*

------------

*Macau ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யசென் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 21-8, 21-14 என்ற செட்கணக்கில் தென்கொரியாவின் Jeon Hyeok Jin -ஐ வென்றார்.*

*கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் Dhruv Kapila – Tanisha Crasto இணை 21-10, 21-15 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் Ratchapol Makkasasithorn – Nattamon Laisuan இணையை வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியது.*

>><><><><<

***இளம் வயதினர் குற்றங்களில் ஈடுபடுவதை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என்று மாநில மனித உரிமை ஆணையத் தலைவர் திரு மணிக்குமார் கூறியுள்ளார்.***

***சேலம் சட்டக்கல்லூரியில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கினை இன்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.***

***குற்றச் செயல்களில் இளையோர் ஈடுபடுவது அதிகரித்துள்ளது வருத்தம் அளிப்பதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.***

***உரிய மன நல ஆலோசனைகள் மூலம் இளையோர் குற்றச்செயலில் ஈடுபடுவதை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு மணிக்குமார் கூறினார்.***

>> <<